**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 14/2022**

**வாதி தரப்பு சாட்சி-2 கணேசன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதி டிரஸ்ட் மற்றும் அதன் நிலங்கள் பற்றிய முழுவிபரம் தெரியுமான என்றால் தெரியும். வாதி டிரஸ்ட்டில் நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் குத்தனை பணம் வசூல் செய்து கொடுக்கிறேன். நான் எவ்வளவு காலமாக மேற்படி வேலை செய்கிறேன் என்றால் கடந்த 30 வருடங்களாக செய்கிறேன். வாதி டிரஸ்ட் மற்றும் அதே போன்று உள்ள மற்ற டிரஸ்ட்களில் நிலங்களின் குத்தகையை வசூல் செய்து அவற்றின் கணக்குகளை கையாள்வதுதான் என் வேலை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் நான் பணிபுரியும் டிரஸ்ட்க்கும் குறிப்பிட்ட பயிர்தான் பயிர் செய்யவேண்டும் என்ற ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை. கடந்த 20 வருடமாக அவ்வாறு எந்த ஒப்பந்தமும் செய்வதில்லை. அவர்களாக பயிர் செய்து கொள்கிறார்கள்.

2) வாதி டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்ட நிலங்களைத் தவிர மற்ற டிரஸ்ட்களிலும் உள்ள நிலங்களை மூன்றாம் நபர்களுக்கு குத்தகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். மற்ற டிரஸ்ட்கள் என்பது வாதி டிரஸ்ட் உடன் தொடர்புடைய டிரஸ்ட்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு டிரஸ்ட்க்கும் ஆண்டு குத்தகை எவ்வளவு என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி அனைத்து டிரஸ்ட்களுக்கும் கணக்கு பராமரிப்பு செய்து ஆடிட்டர் மூலம் மேற்படி கணக்குகளை சரிபார்ப்பது நான்தான் என்றால் சரிதான். மேற்படி வசூல் விபரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எவ்வளவு குத்தகை வசூல் செய்யப்படுகிறது என தெரியும் என்றால் சரிதான். ஏக்கருக்கு வருடத்திற்கு ரூ.1200 வசூல் செய்கிறோம். மேற்படி வசூல் விபரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறோம்.

3) தாவா சொத்தை ஒட்டி வாதி டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்ட நிலத்தை வீரவள்ளி என்ற ஊரைச் சேர்ந்த அதியமான் என்பவரின் குடும்பத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் அதியமானின் தகப்பனார் பெரியசாமிக்கு கொடுக்கப்பட்டு அவர் இறந்த பின்னிட்டு அவர் மனைவி அழகம்மாள் பெயரில் குத்தகை விடப்பட்டுள்ளது. மேற்படி அதியமான் குடும்பத்திற்கு ஏக்கர் ரூ.2000/-க்கு குத்தகை வசூல் செய்யப்படுகிறது. மேற்படி அதியமான் குடும்பத்தின் குத்தகை கணக்கு மற்றும் அடிநில ரசீது தாக்கல் செய்ய முடியுமா என்றால் செய்யலாம். வாதி டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்ட நிலத்தை தவிர மற்ற நிலங்களுக்கு குறைவான குத்தகை வசூல் செய்கிறோம் என்றால் சரியல்ல. மற்ற

குத்தகைதாரர்களிடம் இருந்து குத்தகையை உயர்த்தக்கோரி வாதி டிரஸ்ட் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சொல்லியுள்ளோம். பிரதிவாதியை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா நிலம் கே.பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்து குடியிருப்பு பகுதியில் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

4) தாவா நிலத்திற்கான பாசனவசதி மற்றும் வடிகால் வசதி பற்றிய விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். தாவா நிலத்திற்கு எந்த வாய்க்காலில் இருந்து பாசன வசதி செய்யப்பட்டுள்ளது என்றால் தெற்கு வாய்க்காலில் இருந்து செய்யப்படுகிறது. தாவா நிலத்திற்கும் வாய்க்காலுக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் அரை கிலோ மீட்டருக்கு அதிகமாக இருக்கும். தாவா நிலங்களுக்கு மற்ற நிலங்கள் வழியாக தான் செல்லவேண்டும் என்றும் தனியாக பாதை இல்லை என்றால் சரியல்ல. வாய்க்காலில் இருந்து தண்ணீரானது சிறிய கண்ணாறு வழியாக நிலங்களுக்கு வரும். தாவா நிலத்தை ஒட்டி வடபுறம் வடிகால் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். வடிகால் வாய்க்கால் இருப்பதால் கோடை காலங்களில் தண்ணீர் இல்லாமலும், மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் வருவதாலும் முறையாக விவசாயம் செய்ய இயலாமல் சிரமப்பட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5) பிரதிவாதிக்கு விவசாயம் தவிர வேறுதொழில் தெரியாது என்றும், தன் குடும்ப வாழ்வாதாரத்திற்காகவே தாவா நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் குத்தகை ரூ.100, 150 என சொல்லியுள்ள விபரம் பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி குத்தகை தொகை பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை சட்டவிரோதமாக தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**